# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 60/2018 |
| Prosecution Witness | : | **அ.சா.3** |
| Name | : | **மாதேஷ்வரன்** |
| Father's / Husband Name | : | **பட்டாபிராமன்** |
| Address | : | **அம்மாபாளையம்** |
| Age | : | 65/2025 |

**தேதி : 01.07.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் அம்மாபாளையத்தில் வசித்து வருகிறேன். நான் அம்மாபாளையம் பேருந்து நிறுத்தம் அருகே பெட்டி கடை வைத்துள்ளேன். என்னுடைய கடைக்கு பக்கத்தில் நாகராஜன், வினோத் ஆகியோர்களின்கடை உள்ளது. அவர்களை எனக்கு தெரியும். கடந்த 2018ம் ஆண்டு ஒருநாள் காலை 6.00 மணிக்கு நான் என்னுடைய கடையை திறப்பதற்காக என்னுடைய பெட்டி கடைக்கு சென்று பார்த்தபோது என்னுடைய கடைக்கு முன் ஆஜர் எதிரி போதையில் படுத்திருந்தார். பக்கத்தில் பாட்டில் கிடந்தது. என்னுடைய கடையின் பூட்டு மட்டும் உடைந்திருந்தது. என்னுடைய கடையில் எதுவும் காணாமல் போகவில்லை. என்னுடைய கடையின் சட்டரும் திறக்கவில்லை. மூடிதான் இருந்தது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனுவில் உள்ள விவரங்களை படித்துக்காட்டவில்லை. **புகார்மனுவில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் காவல் நிலையத்திற்கு எதிரியை நான் அழைத்துசெல்லவில்லை. போலீஸார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் கையொப்பம் போட்டேன் என்றாலும், நான் புகார் அளிக்கவில்லை என்றாலும் சரிதான். நான் எழுதிய தாளில்தான் கையொப்பம் செய்தேன். ஏற்கெனவே அதில்இரண்டு பேர் கையொப்பம் போட்டிருந்ததால் நானும் கையொப்பம் போட்டேன். எதிரி என்னுடைய கடையில் இருந்த கல்லா பெட்டியில் இருந்த பணத்தை எடுக்க முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.